# தாம்பரம் மாநகராட்சி

தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கோவிந்தசாமி கூட்ட அரங்கில் 29.12.2025 அன்று காலை 11.45 மணிக்கு அவசர மாமன்ற கூட்டம் நடைபெறும். மேற்படி கூட்டத்திற்கு துணை மேயர், மண்டல குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், நியமனக்குழு உறுப்பினர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

K. Vasanthakumari 27/12

மேயர்

தாம்பரம் மாநகராட்சி

மாநகராட்சி அலுவலகம்,

தாம்பரம்.

நாள். 27.12.2025

---

**பொருள் எண்.1**

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5-இல் கீழ் கண்டுள்ள வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள தயாரித்து வரப்பெற்ற மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டியும், செலவினத்தை பொது / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ரயில்வே சுரங்கப்பாதையில் மின்மோட்டர் மாற்றுதல் | 1.50 |
| 2 | மேலச்சேரி தலைமை நீரேற்று நிலையத்தில் பழுதடைந்த மின்மோட்டர்கள் மாற்றியமைத்தல் (10 HP) | 6.20 |
| 3 | ஆதிநகர் பிரதான கழிவுநீர் உந்து நிலையத்தில் புதிய 75 HP மின்மோட்டர் 2 எண்ணம் கொள்ளுமுதல் செய்தல் | 80.00 |
| 4 | மண்டலம் 5க்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல் | 25.00 |

**அலுவலகக்குறிப்பு :-**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. செலவினத்தை பொது / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.003/2025/இ1)

**பொருள் எண்.2**

தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம் சட்டமன்ற 31 தொகுதிக்குட்பட்ட மண்டலம் 5-இல் அமைய பெற்றுள்ள 18 இடங்களில் உள்ள 127 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு தீவிர சுருக்கம் முறை திருத்தம் 2026 (SIR 2026) பணிகள் மேற்கொள்ள வேண்டிய நேர்விற்கு பொது மக்களால் பூர்த்தி செய்து அளிக்கப்படும் சிறப்பு திருத்த படிவங்களை பெற்று சரிபார்த்து, படிவங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யம் பணி மேற்கொள்ளவதற்கு தேவையான Arabian Tent, Chair, Table, ஆட்டோ விளம்பரம், பேனர்கள், தேனீர், படிவங்கள் பூர்த்தி செய்வது தொடர்பாக ஜெயகோபால் கரோடியா பள்ளி, ராஜகோபாலா திருமண மண்டபம் மற்றும் அம்பேத்கர் திருமண மண்டபம் ஆகிவற்றில் தேர்தல் பணியாளர்கள், அனைத்து கட்சி பிரமுகர்கள், நலச்சங்க உறுப்பினர்கள்

ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிக்கு தேவையான LED Sereen, ஒலி, ஒளி பெறுக்கி, பயிற்சி கையேடு நகல் மற்றும் இறப்பு, முகவரி மாற்ற பட்டியல் நகல் வெளியீடு செய்தமைக்கும், மண்டலம் 5-க்குட்பட்ட வாக்காளர் பட்டியல்களை நகல் எடுத்தமைக்கும், பணியின் அவசர அவசிய மற்றும் தேர்தல் அத்தியாவசி பணி என்பதினால் மாநகராட்சிகள் சட்டம் 57(7)-இன் கீழ் மேற்காண் பணிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்று, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Lavanaya Traders என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(**ந.க.எண்.** 003/2025/இ1)

**பொருள் எண்.3**

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, மாடம்பாக்கம் பகுதியில் தினசரி சேகரம் செய்யும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை பிரித்த பின் எதற்கும் பயன்படுத்த முடியாத Inert கழிவுகளை மாடம்பாக்கம் குப்பை கிடங்கில் சேகரிக்கப்பட்டு, அங்கிருந்து ஆப்பூர் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்பட்டு வரும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள 23.07.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரி, குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s.Ourland Engineering Works Pvt Ltd என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்காண் நிறுவனம் இப்பணியினை மிகவும் காலதாமதமாக மேற்கொண்டு வருகிறன்ற நிலையிலும், தற்போது பருவமழை காலம் என்பதினாலும், தினசரி சேகரம் செய்யப்படும் குப்பைகளை ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு எடுத்த செல்ல வேண்டிய பணி அவசியம் என்பதினால், பணியின் அவசர அவசியம் கருதி, மாடம்பாக்கம் குப்பை கிடங்கிலிருந்து ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு குப்பைகளை எடுத்துச் செல்ல டன் ஒன்று .672/- வீதம் தோராயமாக சுமார் 2970 டன் குப்பைகளை ஆப்பூர் கிடங்கிற்கு எடுத்து செல்ல ஏற்படும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியினை நகராட்சிகள் சட்டம் 57 (7) – இன் கீழ் விலைப்புள்ளி கோரி, 10.11.2025 அன்று குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.CMI Enterprises என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும்,

இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவகியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.CMI Enterprises என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
3. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.** 003/2025/இ1)

**<u>பொருள் எண்.4</u>**

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.64-இல் அமைந்துள்ள சேலையூர் பகுதியில் அமைந்துள்ள ஏரியில் ஆகாய தாமரை செடிகள் அதிக அளவில் உள்ளதினால் மழைக்காலங்களில் பொரும் பாதிப்பு ஏற்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மாண்புமிகு சிறு குறு துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியர், வெள்ளத்தடுப்பு பணிக்கான கண்காணிப்பு அதிகாரி, மற்றும் பொதுப் பணித் துறை அதிகார்கள், ஆகியோர்கள் 17.10.2024 அன்று இடத்தினை நேரடியாக ஆய்வு மற்றும் பார்வையிட்டு ஏரியில் உள்ள ஆகாயத்தாமரை செடிகளை பருவமழைக்கு முன்னர் தாம்பரம் மாநகராட்சியின் மூலம் உடனடியாக அகற்றிட வழங்கிய அறிவுரையின் அடிப்படையில், இப்பணியினை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரிட போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், இப்பணி மாநகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57 (7) இன் கீழ் பணியின் அவசர அவசியம் கருதி உள்ளுர் விலைப்புள்ளி பெற்று, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.கே.ஜெயசீலன் என்ற ஒப்பந்த்தாரர் மூலம் பணி மேற்கொண்டமைக்கும், இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டியும், செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண்.650, நாள்.30.12.2024-இன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. இந்நிலையில், மேற்காண் பணிக்கு M/s.N.N.Engineering என்ற நிறுவனத்திடமிருந்து குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்டதன் அடிப்படையில், இந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள பணி ஆணை வழங்கி, பணி முடிக்கப்பட்டு, பட்டியல் தொகை M/s. NN Engineering என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கிய நேர்வில், மாமன்ற தீர்மான எண்.650, நாள்.30.12.2024-இல் மேற்காண் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கே.ஜெயசீலன் என்ற பெயரில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, தம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண்.64-இல் அமைந்துள்ள சேலையூர் பகுதியில் அமைந்துள்ள ஏரியில் ஆகாய தாமரை செடிகள் அகற்றப்பட்ட பணிக்கு M/s.NN Engineering என்ற பெயரில் (விலைப்புள்ளி பெறப்பட்டதன் அடிப்படையில்) பணி முடிக்கப்பட்டு, அப்பணிக்கான முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை திரு.கே.ஜெயசீலன் என்ற பெயரில் (M/s.NN Engineering என்ற நிறுவனத்தின் உரிமையாளர்) வழங்கப்பட்டது. இதனை மாற்றம் செய்து M/s.NN Engineering என்ற நிறுவனத்தின் பெயரில் பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவகியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.NN Engineering என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
3. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 003/2025/இ1)

<u>பொருள் எண்.5</u>

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் – 5க்குட்பட்ட 13 வார்டுகளில் உள்ள 25 குடிநீர் மேல்நிலைநீர்தேக்க தொட்டிகளில் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீரை குளோரின் சோதனை செய்யவதற்கும், சொத்துவரி / குடிநீர் கட்டணம் தொடர்பான அறிவிப்பு நோட்டீஸ் வழங்குதல் பணிகள் மேற்கொள்ள தனியார்வெளிக்கொணர்வு ஆட்கள் மூலம் மேற்கொள்ள தயாரித்து வரப்பெற்ற மதிப்பீட்டு ரூ.9.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறுதல் தொடர்பாகவும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்..
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொன்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 003/2025/இ1)

## பொருள் எண்.6

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் – 5, வார்டு எண்.70-இல் ராஜாம்பாள் நகர் மற்றும் சீரடிசாய் நகர் பகுதியில் அமைந்துள்ள பூங்காவில் பூபந்து விளையாட்டு கூடம் அமைத்தல் தொடர்பாக தயாரித்து வரப்பெற்ற ரூ.8.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி நிர்வாக அனுமதி பெறுதல் தொடர்பாகவும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்..
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 003/2025/இ1)

## பொருள் எண்.7

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 5, சேலையூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் கடிதத்தில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்து கொடுக்குமாறு மாண்புமிகு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் மண்டலக்குழுத் தலைவர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணிகளுக்கு மதிப்பீடு ரூ. 40.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கூட்ட அறங்கம்
2. நூலக கட்டிடம்
3. பழுதடைந்துள்ள அறிவியல் ஆய்வகத்தை செப்பனிடுதல்

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்..
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 003/2025/இ1)

பொருள் எண்.8

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–5 வார்டு எண்.48 கம்பர் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான நகர்ப்புற ஆரம்பசுகாதார நிலையம் சுமார் 35 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கட்டிடம் மிகவும் பழைமையான கட்டிடமாகவும், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் அதனை இடித்து அப்புறப்படுத்தி புதிய கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.26154/2024/EA2, நாள்.19.07.2025-ன்படி மதிப் .505.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, உரிய வழி முறைகளை பின்பற்றி, 22.08.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய நிறுவனத்தின் மூலம்பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கி நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு மண்டலம் 5க்கான புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. ஏற்கனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மாநகராட்சி வரிவசூல் மைய கட்டிடம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்திட வேண்டிய நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டம் 57 (7) - இன் கீழ் விலைப்புள்ளி பெற்றும், குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. BSM Constuction என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும், இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவகியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. B S M Constuction என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
3. மேற்படி செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 003/2025/இ1)**

பொருள் எண்.9

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் – 5க்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய தாம்பரம் மாநகராட்சிக்கு சொந்தமான டேங்கர் லாரி மூலம் விநியோகிக்கப்படுகிறது. தற்போது போதிய ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் வெளிக்கொணர்வு ஆட்கள் மூலம் ஓட்டுநர் மற்றும் துலக்குநர்

மூலம் இவ்வலுவலக ந.க.எண்.003/2025/இ2(ம5)-இன்படி உரிய அனுமதி பெற்று 31.07.2025 வரை தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை 01.08.2025 முதல் 31.03.2026 வரை தொடர்ந்து மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்தும், இப்பணிக்கு தயாரித்து வரப்பெற்ற மதிப்பீடு ரூ.9.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் இப்பணியினை அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்..
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 003/2025/இ1)

<u>பொருள் எண்.10</u>

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 5, புதியதாக மண்டல அலுவலகம் கட்டும் பணிக்கு 22.08.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில், மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக வரப்பெற்ற L 1 ஒப்பந்ததாரரான M/s.B S M Constuction என்ற நிறுவனத்திடம் விலைக் குறைப்பு (Price Bid Negotation) கோரப்பட்டதில், 07.11.2025 அன்று வரப்பெற்ற விலைக் குறைப்பு பட்டியலின் படி மதிப்பீட்டு தொகையில் 0.06%-க்கு விலைக்குறைப்பு செய்து வரப்பெற்றுள்ளது. தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களின் விலைபட்டியலை திறப்பு செய்ய பரிந்துரை செய்யப்பட்டு அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது..

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | 48 | புதிய மண்டல அலுவலக கட்டிடம் கட்டுதல் | 505.00 | M/s.B S M Constuction - (-) 0.06 % குறைவு (விலைக் குறைப்பிற்கு பிறகு) |
| | | | | Thomas Iyadurai Infrastructure Pvt Ltd – (+) 12.02 % அதிகம் |

அலுவலகக்குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. செலவித்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.003/2025/இ1)

**<u>பொருள் எண்.11</u>**

தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC)-ல் LED Panel Screen நிறுவப்பட்டு 8 வடிவங்களாக செயல்பட்டு வருகிறது. இதற்கான இணையதள வசதி BSNL நிறுவனத்தின் மூலம் Internet Leased Line 50 mbps Lease Line வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 50 mbps Lease Line உபயோகிப்பதால் இணையதள செயல்பாடுகள் மெதுவாக உள்ளதாகவும், இதனால் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் தினசரி பணிகளில் சுணக்கம் ஏற்படுவதாக கோரப்பட்டதை தொடர்ந்து 50 mbps Lease Line-ஐ, 100mbps Internet Lease Line ஆக மாற்றம் செய்ய BSNL நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

இதனை மாற்றம் செய்திட Annual Reccuring Charges over GPON மற்றும் One time charges for Line Integration (Installation and Commissioning) ஆகியவற்றிக்கு ரூ.2,50,000/- மற்றும் GST 18% தொகை ரூ.45,000/- ஆக மொத்தம் ரூ.2,95,000/-ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் Walkie Talkie 276 கருவிகளை ஒருங்கிணைக்கம் மென்பொருள் உருவாக்கிடவுடம், அதனை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள M/s.Arya Omnitalk Wireless Solutions Pvt Ltd நிறுவனத்திற்கு 14.10.205 தேதியில் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கான பட்டியல் தொகை ரூ.5,13,300/-ஐ M/s.Arya Omnitalk Wireless Solutions Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.13**

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் எண்.4. வார்டு எண்.33, சிட்லபாக்கம் கிராமம் சர்வே எண்.218/2, 226/1, 226/2, மற்றும் 227ல் மொத்தம் 4.69 ஏக்கர் விஸ்தீரணத்தில் அரசு நெஞ்சக மருத்துவமனைக்கு அருகில் தாம்பரம் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி, புதிய அலுவலக கட்டிடத்தின் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கீழ்குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் தெற்குபுறத்தில் மின் தூக்கி அமைத்தல் , Gravel filling பணிகள் மற்றும் இதர பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதிய அலுவலக கட்டிடத்தில் தெற்குபுறம் மின் தூக்கி அமைத்தல் | 99.60 |
| 2 | புதிய அலுவலக கட்டிட OSR நிலத்தில் Gravel filling பணி செய்தல் | 97.40 |

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் எண்.4. வார்டு எண்.33, சிட்லபாக்கம் கிராமம் சர்வே எண்.218/2, 226/1, 226/2, மற்றும் 227ல் மொத்தம் 4.69 ஏக்கர் விஸ்தீரணத்தில் அரசு நெஞ்சக மருத்துவமனைக்கு அருகில் தாம்பரம் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி, புதிய அலுவலக கட்டிடத்தின் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கீழ்குறிப்பிட்டுள்ள Power Panel room , கட்டிடத்தின் வடக்குபுறத்தில் மின் தூக்கி அமைத்தல் மற்றும் மற்றும் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதிய அலுவலக கட்டிடத்தில் Power Panel room அமைத்தல் | 40.00 |
| 2 | புதிய அலுவலக கட்டிடத்தில் வடக்குபுறம் மின் தூக்கி அமைத்தல் | 94.00 |

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.15</u>

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் எண்.4. வார்டு எண்.33, சிட்லபாக்கம் கிராமம் சர்வே எண்.218/2, 226/1, 226/2, மற்றும் 227ல் மொத்தம் 4.69 ஏக்கர் விஸ்தீரணத்தில் அரசு நெஞ்சக மருத்துவமனைக்கு அருகில் தாம்பரம் மாநகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகிறது.

மேற்படி, புதிய அலுவலக கட்டிடத்தின் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கீழ்குறிப்பிட்டுள்ள தரை தளத்திற்கு Flooring with Parking line marking பணி. உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புதிய அலுவலக கட்டிடத்தின் தரை தளத்தில் Flooring with Parking line marking பணி செய்தல் . | 71.00 |
| 2 | புதிய அலுவலக கட்டிடத்தின் முதல் தளத்தில் உள்ள மேயர் அறை, துணை மேயர் அறை மற்றும் இதர குழு தலைவர்களுக்கான அறைகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல் பணி. | 19.00 |

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.16**

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மண்டலம்எண்.IIல் வார்டுஎண்.17,21 பகுதிகளில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு மண்டலத் தலைவர், மாமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சியின் உதவிசெயற்பொறியாளர் அவர்களுடன் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப பூங்காக்களில் உள்ள அடிப்படை வசதிகளை மேம்படுத்த கீழ்காணும் பணிகளுக்கு உரிய மதிப்பீடு தயார் செய்து மாமன்றத்தின் நிர்வாக அனுமதி க்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 15 | வார்டு எண்15ல் சித்ரா டவுன்ஷிப் Pickle Ball Court அமைத்தல் பணி | 15.00 |
| 2 | 17 | வார்டு எண்.17ல் சுபம் நகர் பூங்காவிற்கு தேவையான கூடுதல் வசதிகள், பூபந்து விளையாட்டு மைதானம் கூடைபந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி | 25.00 |
| 3 | 21 | வார்டு எண்.21ல் அசோக பூங்காவிற்கு சுற்று சுவர் அமைத்தல் மற்றும் பூங்காவிற்கு தேவையான மின் விளக்குகள் அமைக்கும் பணி | 40.00 |
| 4 | 21 | வார்டு எண்.21ல் அமைந்துள்ள அசோக பூங்காவிற்கு புல்தரை மைதானம் (TURF) அமைத்தல் பணி. | 50.00 |

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2025-26ம் ஆண்டில் பொது மற்றும் திறந்தவெளி கட்டணம் (OSR Fund / CMDA Fund) நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.171/2025/இ1)

## பொருள் எண்.17

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-IIக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மண்டலத் தலைவர், மாநகராட்சியின் உதவிசெயற்பொறியாளர், மாமன்ற உறுப்பினர் அவர்களுடன் நேரடியாக வார்டு பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசிய பணிகளான குடிநீர் பணி, மழைநீர் வடிகால்வாய், புதியதாக அமைக்கவும் மற்றும் புதியதாக பேவர் சாலை மற்றும் புதியதாக நூலககட்டிடம் அமைக்கவும் அதற்குண்டான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கீழ்க்காணும் பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 28 | வார்டுஎண். 28ல் மண்டலம்-II அலுவலகத்திற்கு பொது சுகாதாரப்பிரிவு மற்றும் நகரமைப்புபிரிவிற்கு கூடுதல்வசதிகள் ஏற்படுத்துதல் பணி | 20.00 |
| 2 | | மண்டலம்-2க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு திரவ குளோரின் கொள்முதல் செய்தல் பணி | 20.00 |
| 3 | | GST சாலையில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தினை சீரமைக்கும் பணி | 30.00 |

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2025-26ம் நிதி ஆண்டில் பொது நிதி/குடிநீர்நிதி/கல்விநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 171/2025/இ1)

## பொருள் எண்.18

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-IIக்குட்பட்ட வார்டுஎண்17ல் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ள மண்டலத் தலைவர், மாமன்ற உறுப்பினர், மாநகராட்சியின் உதவிசெயற்பொறியாளர், அவர்களுடன் நேரடியாக வார்டு பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்குண்டான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கீழ்காணும் பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 17 | வார்டுஎண் 17ல் பொன்னியம்மன் தொடக்கப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், நுழைவு வாயில் அமைத்தல் மற்றும் வண்ணப்பூசுதல் பணி | 45.00 |
| 2 | 17 | வார்டுஎண் 17ல் பொன்னியம்மன் உயர்நிலைப்பள்ளியில் நுழைவு வாயில் அமைத்தல். கணினி மையம் மற்றும் ஒருங்கிணைந்த ஒலி பெருக்கி அமைத்தல் பணி | 30.00 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2025-26ம் நிதிஆண்டில் கல்விநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 171/2025/இ1)

<u>பொருள் எண்.19</u>

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்-IIக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகள் கோரி 28.10.2025 அன்று நடைபெற்ற வார்டு சிறப்பு கூட்டத்தில் பொதுமக்களால் மாமன்ற உறுப்பினர்கள் அவர்களிடம் வழங்கப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மண்டலத் தலைவர், மாநகராட்சியின் உதவிசெயற்பொறியாளர், மாமன்ற உறுப்பினர் அவர்களுடன் நேரடியாக வார்டு பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசிய பணிகளான மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் புதியதாக அமைக்கவும் அதற்குண்டான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கீழ்காணும் பணிகளுக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 9 | வார்டு எண்.9ல் யாசின்கான் முதல்தெரு மற்றும் யாசிகான் முதல் குறுக்குத் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய், கிரிப்த் மெயின் ரோடு மற்றும் யாசிகான் முதல் குறுக்குத் தெருவிற்கு சிறுபாலம் அமைக்கும் பணி | 19.00 |
| 2 | 13 | வார்டுஎண்.13ல் அருந்ததிபுரம் முதல் சாலை, ஏழுமலை தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 8.00 |
| 3 | 15 | வார்டுஎண்.15ல் வேல்முருகன்காலனி 1வது குறுக்கு தெரு மற்றும் 2வது குறுக்குத் தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் பணி, மலங்கானந்தபுரம் 5வதுதெரு மற்றும் , வேம்புலியம்மன் கோவில் | 21.50 |

| வ. எ ண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | 5வதுதெருக்களுக்கு சிறுபாலம் அமைக்கும் பணி | |
| 4 | 16 | வார்டுஎண்16ல் பாரதி நகர் பிரதான சாலை, 3வது குறுக்குத் தெரு மற்றும் குவாரி சாலை ஆகிய பகுதிகளுக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் பாரதி நகர் 2வது குறுக்குத்தெருக்களுக்கு சிறுபாலம் அமைக்கும் பணி | 30.00 |
| 5 | 18 | வார்டுஎண்.18ல் தர்மராஜாகோயில் தெரு மற்றும் காந்தி தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 29.00 |
| 6 | 19 | வார்டுஎண்.19ல் கணேஷ்நகர் 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை மற்றும் கணேஷ்நகர் 4வது குறுக்குத்தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 29.00 |
| 7 | 20 | வார்டுஎண்.20ல் ஈஸ்வரன் நகர் 7வதுதெருவிற்கு சிமெண்ட் சாலை மற்றும் ரங்கா நகர் 3வது தெரு, அம்பாள்நகர் 6வது தெருவிற்கு மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 18.00 |
| 8 | 21 | வார்டுஎண்21ல் வசந்தம்நகர் 1வது,2வது,3வது, 4வது பிரதான சாலை மற்றும் 1வது,3வது குறுக்குத் தெரு ஆகிய தெருக்களுக்கு மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 29.00 |
| 9 | 24 | வார்டுஎண்24ல் நாகாத்தம்மன் கோயில் தெரு மற்றும் கண்ணபிரான் கோயில் தெருவிற்கு மூடியுடன் கூடிய மழைநீர்வடிகால்வாய் அமைக்கும் பணி | 33.00 |
| 10 | 26 | வார்டுஎண்.26ல் ஸ்டேஷன்ரோடு, காந்தி நகர், வள்ளுவர் 3வது தெருவிற்கு மழைநீர்வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 30.00 |

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. 2025-26ம் நிதி ஆண்டில் பொது நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 171/2025/இ1)

**பொருள் எண்.20**

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2ல் வார்டுஎண்14ல் கிழக்கு புதுவை நகரில் 3வது தெருவில் சமுதாய கழிப்பிடம் (Community Toilet) தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லை என பொது சுகாதாரப்பிரிவு மூலம் அளிக்கப்பட்ட குறிப்பின்படி மேற்படி கழிப்பறையினை நீக்கி வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண் 171/2025/இ1)

**பொருள் எண்.21**

தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகம் கூடம் இடங்களான மார்க்கெட், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், நகர் நல மையங்கள், குப்பை சேகரிக்கும் இடங்களில், மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் கிருமிநாசினியாகவும் பயன்படுத்தக்கூடிய பிளீச்சிங் பவுடர் வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட், சென்னை-600 104 என்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று, ஒரு மண்டலத்திற்கு 5 டன் வீதம் 5 மண்டலத்திற்கு சேர்த்து 25 டன் வாங்கிக்கொள்ள, ஆணையர் அவர்களின் அனுமதி பேரில் வாங்கி வழங்கிட உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி, கிருமிநாசினி பிளீச்சிங் பவுடர் கிலோ ஒன்றிற்கு ரூ.40/- என்ற விலை விகிதத்தில் 25 டன்னிற்கு கணக்கிடப்பட்டு, தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.829 நாள்.31.10.2025-ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தில் பில்பட்டியலில் GST 18% சேர்த்து தொகை ரூ.11,80,000/- வழங்க கேட்டு, பட்டியல் வரப்பெற்றுள்ளது. கூடுதலாக வரப்பெற்ற தொகை ரூ.1,80,000/- ஐ பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் அவர்களின் முன் அனுமதி பேரில், தொகை வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1402/2025/எச்1(மையம்))**

**பொருள் எண்.22**

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்டபகுதியில் தாம்பரத்தை மையமாகக்கொண்டு செயல்படும் கழிவு மேலாண்மை மற்றும் சிறியளவு திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆடைகள் (Post – Consumer Textile) மற்றும் தையல் கழிவுகளை (Tailoring Waste) சேகரிக்கும் சிறப்புத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. துணிக்கழிவுகள் குப்பைத் தொட்டிகள், திறந்தவெளிக் குப்பைகள் மற்றும் நீர்நிலைகளில் துணிக் கழிவுகள் தேக்குவதை தடுத்து, பொது மக்களிடையே முறையான துணிக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், இந்த முயற்சி கீழ்காணும் விவரப்படி,

1) வீடுகள், நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட பழைய துணிக்கழிவுகள்

2) தையல் கடைகள் மற்றும் ஆயத்த ஆடை விற்பனை நிலையங்களிலிருந்து வெளியாகும் துணிக் கழிவுகள்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஜவுளிக் கழிவுகள் அறிவியல் பூர்வமாகப் பிரிக்கப்பட்டு மறுபயன்பாட்டிற்கு (Reuse), மேம்படுத்தப்பட்ட மறுசுழற்சி (Upcycling) மற்றும் முறையான மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படும். இந்தத் திட்டம் தாம்பரம் மாநகராட்சி குழுக்களுடன் ஒருங்கிணைந்து வார்டு அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்திடவும்,
இந்த முயற்சியை முறையாகத் தொடங்கி வைப்பதற்கும் (Flag - off), ஜவுளிக் கழிவு மேலாண்மையில் தாம்பரம் மாநகராட்சி முன்னோடி நகரமாக நிலைநிறுத்துவதற்கும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழவும், உருவாக்குவதற்கும், இந்த இயக்கம் தாம்பரம் மாநகராட்சிக்கு ஒரு இலவச பொது சேவை முயற்சியாக செயல்படுத்தப்படும் எனவும், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களுக்கு முழுமையாக செயல்படுத்திடும் வழக்கமான அறிக்கை மாநகராட்சியுடன் பகிரப்படும். இயக்கத்தை நடத்துவதற்கும், அதிகாரப்பூர்வமாக செயல்படுத்துவதற்கு தேவையான கள அளவிலான ஒருங்கிணைப்பு ஆதரவை வழங்கிட அனுமதி கோரி, M/s.Spreco Recycling Pvt. Ltd., என்ற நிறுவனம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
(**ந.க.எண்.** /2025/**எச்1(மையம்)**)

<u>பொருள் எண்.23</u>

தாம்பரத்தை மையமாகக்கொண்டு, இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் "சக்கரங்களில் மறுசுழற்சி (Recycling on Wheels Row)" என்ற தலைப்பிலான நடமாடும் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி திட்டதைத் செயல்படுத்தும் வகையில் (For Demonstration Purposes) கீழ்க்கண்ட தரப்பினருக்குப் பயிற்சி அளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1)குடியிருப்பாளர் நலச் சங்கங்கள் (RWAs)
2) கல்வி நிறுவனங்கள்
3) அரசு அதிகாரிகள்
4) தூய்மைப் பணியாளர்கள்
5) மொத்த கழிவு மற்றும் சிறு கழிவுகளை உற்பத்தியாளர்கள்

இந்த முயற்சியின் நோக்கம், கழிவுகளைத் தரம் பிரித்தல், நெகிழிக் கழிவுகளை பொறுப்புடன் கையாளுதல் மற்றும் பரவலாக்கப்பட்ட மறுசுழற்சி முறைகள் குறித்து, நடைமுறைப் பயிற்சியை வழங்குவதாகும். குறிப்பாக பல அடுக்கு பிளாஸ்டிக்குகள் (MLP), LDPE மற்றும் மறுசுழற்சி செய்ய கடினமான பிளாஸ்டிக் பொருட்கள் போன்ற குறைந்த மதிப்புள்ள பிளாஸ்டிக் கழிவுகள் மீது இந்த திட்டம் கவனம் செலுத்த, இந்த வரிசை (Row) திட்டத்தின் ஒரு பகுதியாக, சேகரிக்கப்பட்ட குறைந்த மதிப்புள்ள பிளாஸ்டிக் கழிவுகளை, சுத்தமான மற்றும் பாதுகாப்பான மறுசுழற்சி செயல்முறைகள் மூலம் நடைபாதைகற்கள் (Paver Blocks) மற்றும் பிற பயன்பாட்டுப்பொருட்களாக மாற்றும் நேரடி செயல் விளக்கங்களை மெசர்ஸ். ஸ்ப்ரெகோ நடத்தும். இந்த முயற்சியின் கீழ் தயாரிக்கப்படும் நடைபாதை கற்கள் மற்றும் இதர பொருட்கள், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட நடைபாதைகள்,பூங்காக்கள், பொது கழிப்பறைகள், மழைநீர் வடிகால் மற்றும் பொது இடங்களின் மேம்பாட்டிற்காகத் தாம்பரம் மாநகராட்சிக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும், இந்நிறுவன முன்னோடி திட்டத்தினை இம்மாநகராட்சி எல்லைக்குள் செயல்படுத்த அனுமதி கோரி, M/s.Spreco Recycling Pvt. Ltd., என்ற நிறுவனம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** - மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். /2025/61&1(60) DWLD))

**<u>பொருள் எண்.24</u>**

தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகம் கூடம் இடங்களான மார்க்கெட், பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள், நகர் நல மையங்கள், குப்பை சேகரிக்கும் இடங்களில், மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் கிருமிநாசினியாகவும் பயன்படுத்தக்கூடிய நீர்த்த சுண்ணாம்பு, வாங்க அரசு அங்கீகாரம் பெற்ற காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட், சென்னை-600 104 என்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று, ஒரு மண்டலத்திற்கு 50 டன் வீதம் 5 மண்டலத்திற்கு சேர்த்து 250 டன் வாங்கிக்கொள்ள, ஆணையர் அவர்களின் அனுமதி பேரில் வாங்கி வழங்கிட உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி, நீர்த்த சுண்ணாம்பு தூள் கிலோ ஒன்றிற்கு ரூ.9/- என்ற விலை விகிதத்தில் 250 டன்னிற்கு கணக்கிடப்பட்டு, தொகை ரூ.23.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.830 நாள்.31.10.2025-ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தில் பில்பட்டியலில் GST 5% சேர்த்து தொகை ரூ.23,62,500/- வழங்க கேட்டு, பட்டியல் வரப்பெற்றுள்ளது. கூடுதலாக

வரப்பெற்ற தொகை ரூ.62,500/- ற்கு பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :-

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர் அவர்களின் முன் அனுமதி பேரில், தொகை வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1400/2025/எச்1 (மையம்))

<u>பொருள் எண்.25</u>

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3ற்குட்பட்ட பகுதியில் வருவாய் நிதி 2025-26ன் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.003/2025/இ1(ம3) நாள் 01.12.2026ன் படி 17.12.2026 அன்று இணையதளம் வாயிலாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தாம்பரம் மாநகராட்சி வார்டு எண், 22, 23, 24 மற்றும்34 முதல் 44 வரை 40w, 70w 150w எல்.ஈ.டி. தெரு மின் விளக்குகள் சப்ளை செய்து பொருத்துதல் பணி | 54.00 | லட்சமி எண்டர்பிரைசஸ் | 2.20% குறைவு ரூ.5131230 |

**அலுவலக குறிப்பு**

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒரு ஒப்பந்தப்புள்ளி தகுதி பெறவில்லை. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.003/2025/இ1(ம3))

<u>பொருள் எண்.26</u>

தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகராட்சியாகும் மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுர கீ.மீ ஆகும் மாநகராட்சியில் மொத்தம் 70 வார்டுகள் உள்ளது. மொத்த மக்கள் தொகை 1011320 ஆகும். 252830 வீடுகளில் மொத்தம் 400 மெட்ரிக் டன் திடக்கழிவு

மாநகராட்சி பகுதிகளிலிருந்து சேகரம் செய்யப்பட்டு வருகிறது. அதில் 200 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளும் (50%). 200 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளும் (50%) உருவாகிறது. இதில் மக்காத கழிவுகளில் தரம் பிரிக்கப்படுவதில் விற்க உகந்தவை 100 மெட்ரிக் டன் (Saloable) (25%) 100 மெட்ரிக் டன் செயலற்ற பொருட்கள் (innert materials)25% என்ற வீதத்தில் உருவாகிறது.

மக்கும் குப்பைகளை 26 பசுமை உரக்குடில்கள், 53 நுண்ணயிர் செயலாக்க மையங்கள் மூலம் 80 மெட்ரிக் டன் குப்பைகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கன்னடப்பாளையம், மாடம்பாக்கம் மற்றும் விஸ்வேஷபுரம் ஆகிய குப்பை மாற்றும் நிலையங்களில் குப்பை சேகரம் கொட்டப்பட்டு ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு எடுத்துச் சென்று இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

அதன் படி தற்போது மண்டலம் 4ல் அமைந்துள்ள கன்னடப்பாளையம் குப்பை கிடங்கிற்கு தாம்பரம் பெருங்களத்துர், பீர்க்கன்கரனை ஆகிய பகுதிகளின் குப்பைகளும் மண்டலம் 1ல் அமைந்துள்ள விஸ்வேசபுரம் குப்பை கிடங்கிற்கு திருநீர்மலை, அனகாபுத்துர் பம்மல் மற்றும் பல்லாவரம் ஆகிய பகுதிகளின் குப்பைகள் மற்றும் மண்டலம் 5ல் மாடம்பாக்கம் குப்பை கிடங்கில் மாடம்பாக்கம் பகுதி குப்பைகளும் சேகரம் செய்யப்பட்டு டாரஸ் வாகனம் மூலம் பொக்லைன் உதவியுடன் ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு குப்பைகளை தரம் பிரித்து இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது என பொது சுகாதார பிரிவின் மூலம் தெரிவக்கப்பட்ட நிலையில் நாளுக்கு நாள் குப்பைகள் அதிக அளவில் வருவதால் 80 மெட்ரிக் டன் செயலற்ற பொருட்கள் (inert materials) பெறப்படுவதற்கு பதிலாக கூடுதலாக 250 மெட்ரிக் டன் கலப்பு கழிவுகள்(Mixed waste) குப்பை கிடங்கிற்கு பெறப்படுகிறது.

மேலும் இங்கு சேர்ந்துள்ள குப்பைகளை முழுவதுமாக அகற்ற இயலவில்லை தொடர்ந்து தற்பொழுது பெய்த கனமழையினால் மரக்கழிவுகள் அதிக அளவில் சேகரம் செய்யப்பட்டு குப்பைகள் அதிக அளவில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போது மழைகாலம் என்பதாலும் பொது சுகாதார பணி என்பதால் கன்னடப்பாளையம் குப்பை கையாளும் மையத்தில் தேங்கியுள்ள குப்பைகளை ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்ல ஆணையாளர் அவர்களின் அறிவுத்தலின் படி மதிப்பீட்டு தொகை ரூ.24.95 இலட்சத்திற்கு உடன் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி அன்று பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட சதவீதம் | அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | கன்னடப்பாளையம் குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை ஆப்புர் குப்பை கிடங்கிற்கு டாரஸ் வாகனம் மூலம் கொண்டு செல்லும் பணி | M/s. ஸ்ரீ செல்லியம்மன் & கோ | 0.27% | குறைவு |
| | | M/s.சுந்தரம் & கோ | 1.37% | அதிகம் |
| | | M/s. Harshita Associates | 2.02% | அதிகம் |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ராகா & கோ நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

2.மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஸ்ரீ செல்லியம்மன் & கோ விலைப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை நிறுவனத்தின் மேற்கொண்டதற்கும், அதற்கான பட்டியல் தொகை பொது நிதியின் கீழ் வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.27**

தாம்பரம் மாநகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள மாநகராட்சியாகும் மாநகராட்சியின் பரப்பளவு 87.64 சதுர கி.மீ ஆகும் மாநகராட்சியில் மொத்தம் 70 வார்டுகள் உள்ளது. மொத்த மக்கள் தொகை 1011320 ஆகும்: 252830 வீடுகளில் மொத்தம் 400 மெட்ரிக் டன் திடக்கழிவு மாநகராட்சி பகுதிகளிலிருந்து சேகரம் செய்யப்பட்டு வருகிறது. அதில் 200 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளும் (50%). 200 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளும் (50%) உருவாகிறது. இதில் மக்காத கழிவுகளில் தரம் பிரிக்கப்படுவதில் விற்க உகந்தவை 100 மெட்ரிக் டன் (Saleable) (25%) 100 மெட்ரிக் டன் செயலற்ற பொருட்கள் (innert materials)25% என்ற வீதத்தில் உருவாகிறது.

மக்கும் குப்பைகளை 26 பசுமை உரக்குடில்கள், 53 நுண்ணயிர் செயலாக்க மையங்கள் மூலம் 80 மெட்ரிக் டன் குப்பைகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கன்னடப்பாளையம், மாடம்பாக்கம் மற்றும் விஸ்வேஷபுரம் ஆகிய குப்பை மாற்றும் நிலையங்களில் குப்பை சேகரம் கொட்டப்பட்டு ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு எடுத்துச் சென்று இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

அதன் படி தற்போது மண்டலம் 4ல் அமைந்துள்ள கண்டைப்பாளையம் குப்பை கிடங்கிற்கு தாம்பரம் பெருங்களத்துர், பீர்க்கன்கரனை ஆகிய பகுதிகளின் குப்பைகளும் மண்டலம் 1ல் அமைந்துள்ள விஸ்வேசபுரம் குப்பை

கிடங்கிற்கு திருநீர்மலை, அனகாபுத்தூர் பம்மல் மற்றும் பல்லாவரம் ஆகிய பகுதிகளின் குப்பைகள் மற்றும் மண்டலம் 5ல் மாடம்பாக்கம் குப்பை கிடங்கில் மாடம்பாக்கம் பகுதி குப்பைகளும் சேகரம் செய்யப்பட்டு டாரஸ் வாகனம் மூலம் பொக்லைன் உதவியுடன் ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு குப்பைகளை தரம் பிரித்து இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது என பொது சுகாதார பிரிவின் மூலம் தெரிவக்கப்பட்ட நிலையில் நாளுக்கு நாள் குப்பைகள் அதிக அளவில் வருவதால் 80 மெட்ரிக் டன் செயலற்ற பொருட்கள் (inert materials) பெறப்படுவதற்கு பதிலாக கூடுதலாக 250 மெட்ரிக் டன் கலப்பு கழிவுகள்(Mixed waste) குப்பை கிடங்கிற்கு பெறப்படுகிறது.

மேலும் இங்கு சேர்ந்துள்ள குப்பைகளை முழுவதுமாக அகற்ற இயலவில்லை தொடர்ந்து தற்பொழுது பெய்த கனமழையினால் மரக்கழிவுகள் அதிக அளவில் சேகரம் செய்யப்பட்டு குப்பைகள் அதிக அளவில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போது மழைகாலம் என்பதாலும் பொது சுகாதார பணி என்பதால் கன்னடப்பாளையம் குப்பை கையாளும் மையத்தில் தேங்கியுள்ள குப்பைகளை ஆப்பூர் குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்ல ஆணையாளர் அவர்களின் அறிவுத்தலின் படி மதிப்பீட்டு தொகை ரூ.24.95 இலட்சத்திற்கு உடன் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி அன்று பெறப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதற்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | பணியின் விவரம் | நிறுவனத்தின் பெயர் | மதிபீட்டை விட சதவீதம் | அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | கன்னடப்பாளையம் குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை ஆப்புர் குப்பை கிடங்கிற்கு டாரஸ் வாகனம் மூலம் கொண்டு செல்லும் பணி | M/s.ஸ்ரீ செல்லியம்மன் & கோ | 0.27% | குறைவு |
| | | M/s.சுந்தரம் & கோ | 1.37% | அதிகம் |
| | | M/s. Harshita Associates | 2.02% | அதிகம் |

மேற்படி பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ராகா & கோ நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஸ்ரீ செல்லியம்மன் & கோ நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று. பணி உத்தரவு

வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும், அதற்கான பட்டியல் தொகை பொது நிதியின் கீழ் வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.28</u>

தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 4. எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15-வது மத்திய நிதிக்குழு மானியம் 2025-26ஆம் நிதியாண்டின் AAQ for Urban Agglomeration -ன்கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள 03.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு. தொழில் நுட்ப தகுதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 23.12.2025 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீடு தொகைக்கான சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.57 க்குட்பட்ட பகுதியில் உள்ள பொன்னியம்மன் கோவில் குளம் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளதல், | 139.00 | M/s. Sri Selliamman and Co | (-)0.80% குறைவு |
| | | | M/s. Sundaraman and Co | (-)0.30% குறைவு |
| 2 | வார்டு எண்.56ல் காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள முடிச்சூர் சாலை சந்திப்பு முதல் இந்திரா நகர் பிரதான சாலை வரை தார் சாலை அமைத்தல் பணி. | 78.50 | M/s. Sri Sellamman and Co | (-)0.22% குறைவு |
| | | | M/s. Sundaraman and Co | (+)0.17% அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் பணி உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.340/2025/இ1(ம-4))**

K. Vasantkumar 27/12

**மேயர்**

**தாம்பரம் மாநகராட்சி**

**தாம்பரம்மாநகராட்சி**

**29.12.2025 அன்று நடைபெற்ற மாமன்ற அவசர கூட்டத்தில்**

**நிறைவேற்றப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்**

| பொருள் எண். | தீர்மானம் எண். | அவசர கூட்ட பொருள்கள் மீது எடுக்கப்பட்ட முடிவு |
|---|---|---|
| 1 | 1124 | அலுவலக குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 2 | 1125 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 1126 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 1127 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 1128 | அலுவலக குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 6 | 1129 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 1130 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 8 | 1131 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 9 | 1132 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| 10 | 1133 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 1134 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 1135 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 1136 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 1137 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 1138 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 1139 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 1140 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 1141 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 19 | 1142 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 1143 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 21 | 1144 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 22 | 1145 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 23 | 1146 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 24 | 1147 | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 1148 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |

| பொருள் எண். | தீர்மானம் எண். | அவசர கூட்ட பொருள்கள் மீது எடுக்கப்பட்ட முடிவு |
|---|---|---|
| 26 | 1149 | அலுவலக குறிப்பு பொருள் எண்.26 குறிப்பு பதிவில் தவறுதலாக குறைந்த விலைப்புள்ளி M/s. ராகா &கோ என உள்ளதை M/s.செல்லியம்மன்& கோ என திருத்ததுடன் அனுமதிக்கப்படுகிறது. |
| 27 | 1150 | அலுவலக குறிப்பு பொருள் எண்.27 குறிப்பு பதிவில் தவறுதலாக குறைந்த விலைப்புள்ளி M/s. ராகா &கோ என உள்ளதை M/s.செல்லியம்மன்& கோ என திருத்ததுடன் அனுமதிக்கப்படுகிறது. |
| 28 | 1151 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

(ஒப்பம்) திருமதி. வசந்தகுமாரி. க,
மேயர்,
தாம்பரம் மாநகராட்சி.

/ உண்மைநகல் /

ஆணையாளர்,
தாம்பரம்மாநகராட்சி.